57309/ஜே4/2021-69-
051481

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு.V.மெர்லின் ஜிஜு (த/பெ (மறைந்த) திரு.S.வின்செண்ட்) என்பவருக்கு 16.07.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி(தொ.க.1(2)) துறை**

அரசாணை (2டி) எண்.94

நாள் 03.08.2023.
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஆடி மாதம் 18

17 AUG 2023

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதம் ந.க.எண்.57309/ஜே/இ4/2022, நாள் 06.05.2023.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
4. அரசு கடித (நிலை) எண்.213/க்யு1/2019, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.09.11.2019.

******

**ஆணை:-**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.V.மெர்லின் ஜிஜு என்பவர் இளநிலை உதவியாளராக 16.07.2021 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.S.வின்செண்ட் என்பார் கன்னியாகுமரி மாவட்டம், கொல்லன்விளை, அரசு தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்த போது பணிக்காலத்தில் 27.06.2012 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.V.மெர்லின் ஜிஜு என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 31.07.1988 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

3. மேற்கூறிய நிலையில், பள்ளிக் கல்வி ஆணையரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. கன்னியாகுமரி மாவட்டம், கொல்லன்விளை, அரசு தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.S.வின்செண்ட் என்பவரின் வாரிசான திரு.V.மெர்லின் ஜிஜு என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 16.07.2021 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை வரன்முறைப்படுத்திட மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறவேண்டிய அவசியம் எழவில்லை என்பதால், அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது பணியினை நியமன நாளான 16.07.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா. எண்.4723/LG1/2023, நாள் 05.07.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா. எண்.5130650/ஜி1/23, நாள் 28.07.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>:-
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. மானஸ் 8/8/23
பிரிவு அலுவலர்.